**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.555/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.12.புஷ்பக்கனி** |
| **Father's Name** | : **சமுத்திரகனி** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.03.2022**

**மு.வி:**

நான் தற்போது திருச்சி மாவட்டத்தில் உள்ள தற்காலிக காவலர் பயிற்சி பள்ளியில் உதவி சட்டபோதகராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 04.02.2014 ஆம் தேதி மணிக்கு டி.இராமநாதபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது எழுமலை வட்ட காவல் ஆய்வாளருக்கு உதவியாக எழுமலை காவல் நிலைய குற்ற எண்.17-14 இதச பிரிவுகள் 380 வழக்கின் எதிரி வசந்தி என்பவரை 04.02.2014 ஆம் தேதி 13 மணிக்கு ஆண்டிபட்டி பஸ் நிலையம் அருகில் வைத்து எழுமலை வட்ட காவல் ஆய்வாளர் கைது செய்தபோது அவருக்கு நான் உதவியாக இருந்தேன். 13.15 மணிக்கு எதிரி ஆய்வாளரிடம் சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஆண்டிபட்டியில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரி மறைத்து வைத்திருந்த 12 ½ பவுன் தங்க நகைகளை எதிரி ஆஜர் செய்தார். அதை சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். எழுமலையில் உள்ள வாதியின் வீட்டிற்கு வந்து எதிரி தான் திருடிய விதத்தை ஆய்வாளர் முன்னிலையில் செய்து காண்பித்தார். பிறகு எதிரியை 17 மணிக்கு எழுமலை காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பிறகு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். எதிரிக்கு கைவிரல் ரேகையை எடுப்பதற்கு நான் உதவியாக இருந்தேன். எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவும் நான் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி:

பொதுநாட்குறிப்பில் அன்றாட பணி சம்மந்தமாக குறிப்புகளை எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த ஊர் எழுமலை என்றால் சரிதான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் ஆண்டிபட்டி தாலுகாவில் உள்ள தெப்பம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை 8 மணி அளவில் நான் நிலையத்திலிருந்து ஆய்வாளருடன் சென்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்த சாட்சிகள் எழுமலையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பேருந்து நிலையம் முன்பு தனிநபர்கள் யாரையும் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சாட்சியாக அழைத்தபோது யாரும் சாட்சியாக கையொப்பம் செய்ய முன்வரவில்லை. ஆண்டிபட்டி பேருந்து நிலையம் அருகில் உள்ள காவல் நிலையம் சென்று நிலைய அதிகாரிடம் எதிரியை கைது செய்வதற்கு உதவி எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1 ¼ மணி நேரம் ஆனது. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்று ஞாபகமில்லை. அந்த இடத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்ட நிலையில் புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரியின் வீட்டிற்கு சென்ற பிறகோ எழுமலை காவல் நிலையம் வந்த பிறகோ நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்படுவதற்கு முன்போ எந்த புகைப்படமும் எதிரியை வைத்து எடுக்கவில்லை என்றால் புகைப்படம் எடுத்ததாக ஞாபகம் உள்ளது ஆனால் எங்கு எடுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. புள்ளிவிபர கணக்கிற்காக எனது மேல் அதிகாரியான ஆய்வாளரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபட்டு நிலையத்திலேயே வைத்து தயாரிக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.